பெரம்பூர் பேருந்து முனையத்திலிருந்து

பொன்னேரி - பெரியபாளையம் - கும்முடிபூண்டிக்கு பேருந்துகளை இயக்குக!

சட்டப்பேரவையில் – திரு.வி.க.நகர் – தாயகம் கவி கோரிக்கை!

சென்னை, மார்ச். 29-

பெரம்பூர் பேருந்து முனையத்திலிருந்து பொன்னேரி, பெரியபாளையம், கும்முடிப்பூண்டிகளுக்கு நேரடியாக பேருந்துகளை இயக்க வேண்டும் என்று பேரவையில் கேள்வி நேரத்தில் போது தாயகம் கவி கோரிக்கை விடுத்தார்.

இது குறித்த விவாதம் வருமாறு:

ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியிலே வசிக்கின்ற அனைத்து தரப்பு மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு, பெரம்பூர் பேருந்து முனையத்திலிருந்து நேரடியாக கோயம்பேட்டிற்கும், பெரம்பூரிலிருந்து பொன்னேரிக்கும், அதைப்போலவே, பெரம்பூரிலிருந்து பெரியபாளையம், பெரம்பூரிலிருந்து கும்மிடிப்பூண்டி ஆகிய இடங்களுக்கு நேரடியாக பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

எஸ்.எஸ். சிவசங்கர்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் புதிதாக மின் பேருந்துகளை வாங்கி, சென்னையிலே இயக்குவதற்கு உத்தரவிட்ட வகையில் அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. நேற்றுகூட, எண்ணூரில் இருக்கின்ற Ashok Leyland நிறுவனத்தில் புதிதாக பயன்பாட்டிற்கு வர இருக்கின்ற மின் பேருந்துகளை நேடியாகச் சென்று ஆய்வு செய்கின்ற வாய்ப்பைப் பெற்றேன். அந்தப் பேருந்துகள் முதலமைச்சர் அவர்களுடைய பொற்கரங்களால் ஜூன் மாதத்துவக்கத்திலே துவக்கி வைக்கப்பட இருக்கிறது. அந்தப் பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரும்பொழுது சட்டப்பேரவை உறுப்பினர் தாயகம் கவி அவர்கள் கோரிய திரு.வி.க. நகர் பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கும், சென்னையின் முக்கிய பகுதிகளுக்கும் தேவையான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கீதா முரளி எம்.சி. தலைமை ! எஸ்.முரளி முன்னிலையில்

171 வது வார்டில் புதிய நியாய விலை அங்கன்வாடி கட்டிடம்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.திறந்து வைக்கிறார்!

சென்னை, மார்ச். 29-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சியில் 171வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.கிதாமுரளி எம்.சி. தலைமையில் 2023-24ஆம் ஆண்டு உறுப்பினர் நல நிதியின் கீழ் ரூபாய். 19:48 லட்சம் மதிப்பீட்டில் நியாய விலை அங்காடி கட்டிடம் திறப்பு விழா இன்று (29.03.2025 - சனிக் கிழமை) காலை 10 மணி அளவில் ராஜா கிராமணி தோட்டத்தில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகிக்கின்றனர்.

பா.பொன்னுசாமி வரவேற்கின்றார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நியாய விலை அங்காடி கட்டிடத்தை திறந்து வைக்கிறார்.

171 அ வட்டக் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் வட்டத்தை சார்ந்த மகளிர் மற்றும் பொதுமக்கள்கள் அனைவரும் கலந்து கொண்டு

சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி தெரிவித்துள்ளார்.

சென்னை மேற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பில் கோலப்போட்டி!

நே.சிற்றரசு, குமரி விஜயகுமார், தயாநிதி மாறன் எம்.பி. – எம்.கே.மோகன் எம்.எல்.ஏ. – ந.இராமலிங்கம் எம்.சி., கார்த்திக் மோகன் பங்கேற்பு!

சென்னை, மார்ச். 29-

சென்னை மேற்கு மாவட்டம் மகளிர் தொண்டரணி சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் மகளிர் கோலப்போட்டி மற்றும் 500 நபர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று 29/3/2025 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் கலெக்ரேட் காலனி மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் எஸ்.சியாமளா செந்தில் அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாநில மகளிர் ஆணைய தலைவி மகளிர் அணி துணை அமைப்பாளர் வி.குமாரி விஜயகுமார், மாநில பிரச்சாரக் குழு செயலாளர் 102வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர்.ராணி ரவிச்சந்திரன் எம்.சி., மாநில மகளிர் அணி வலை தள பொறுப்பாளர் டாக்டர் ஆர்.யாழினி, மகளிர் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.யோகேஸ்வரி சுந்தரேசன், மகளிர் தொண்டர் அணி மாவட்ட அமைப்பாளர் டி.கே.லதா பிளாரன்ஸ், 107வது வட்ட செயலாளர் டி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். கு.பச்சையம்மாள், கே.ரேணுகா, ப.சசிகலா, மேரி இசபெல்லா, நா.அங்காளம்மா, பி.ராஜேஸ்வரி, வே.ரமணி, சத்யப்பிரியா, தீபா சந்திரசேகர் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள். கோலப்போட்டியில் கலந்து கொண்டவர்களுக்கு பரிசளித்து நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுவோர் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சென்னை மாநகராட்சியின் பணிக் குழு தலைவர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் எம்.பி., அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., அண்ணா நகர் பகுதி கழக செயலாளர் சென்னை பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம் எம்.சி., மாநில தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன்

மாநில நிர்வாகிகள்/ தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் டாக்டர் நா.சந்திர பாபு, சிசேரன், ஏ டி முருகன், கராத்தே என்.ஆனந்த் மாவட்ட நிர்வாகிகள் து.விட்டார், ஆர்.என். துறை, வி.எஸ். கலைச்செல்வன், ஆ.சங்கீதா, அகஸ்டின் பாபு, ஐ.கென்னடி, 5.ராம்குமார் அண்ணா நகர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஏ.கே.மூர்த்தி, எஸ்.பி. குமார், ஆர்.எஸ்.கில்பர்ட் பானுமதி. கிருஷ்ணசாமி வட்டக் கழக செயலாளர்கள் ந.அதியமான், இரா. பொன்னுரங்கம், இரா,நவீந்திர குமார், ப.மகேஷ்ராஜா, வி.எம். சிவா மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ப.பிரகாஷ், துபாய் வி. ஆர்.விஜய், ச.அசோக் குமார், வழக்கறிஞர் வி. தேவேந்திரன், வழக்கறிஞர் பி.நன்மாறன், கே குட்டி, வழக்கறிஞர் ஆனந்த் குமார், ஏ.டி.ஏ.யூனிஸ் மைதீன் மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் சுலோச்சனா ராமு, விஜயா கோபால், வி.கலையரசி, சரிகா(எ) ராதிகாராஜன், செல்வி, ர.கவிதா, எஸ்.லில்லி சமாதானம், அனுராதா அபி, உமா தர்மராஜ், ஜோதி மீனா 107 ஆவது வட்ட நிர்வாகிகள் இ. கன்னியப்பன், எஸ்.சபிக்ராஜா, எம். ராமு, தீபா தனசேகர், ஜே.கிரி, சி.அருள்மணி, சு.வெற்றி செல்வன், எஸ். எம்.மொய்தீன், தி.கதிரவன், கே.பி.என்.ராஜ் நிகழ்ச்சி இறுதியாக மாவட்ட மகளிர் தொண்டர் அணி வலைதள பொறுப்பாளர் தாரா வீரன், அண்ணாநகர் தெற்கு பகுதி மகளிர் அணி அமைப்பாளர் ஜி.மலர்விழி ஆகியோர் நன்றியுரை ஆற்றுகிறார்கள்.

100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. கண்டன உரை ஆற்றுகிறார்! அ.ம.துரைவீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச். 29

சென்னை தெற்கு மாவட்டம், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் ஆலோசனைப்படி, இன்று (29.03.2025 சனிக் கிழமை) காலை 10 மணிக்கு, அயப்பாக்கம் வாட்டர் டேங்க் அருகில் நடைபெறுகிறது.

வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி தலைமையில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.பி.அருண் முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி கண்டன உரை ஆற்றுகிறார்.

ஆகவே இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், உள்ளாட்சி கழக உடன் பிறப்புகள் அனைவரும் அலை கடலென திரண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரை வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இராயபுரம் சட்டமன்ற தொகுதி 50வது வட்டத்தில் சென்னை மாநகராட்சி சார்பில் நடந்த மாபெரும் கண் சிகிச்சை மருத்துவ முகாமை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். பொது மக்களிடம் முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்த ஸ்டான்லி மருத்துவமனையில் முழு உடல் பரிசோதனை ரூபாய். 1000/– மட்டும் செலுத்தி உடல் பரிசோதனை செய்து கொள்ளலாம் என்பதை தெரிவித்து, பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு மருத்துவப் பயன் பெறுமாறு கேட்டுக் கொண்டார். கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் ஆர்.சுரேஷ்குமார், வட்ட செயலாளர் ஆர்.வி.கணேஷ், மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி

கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்த வேண்டும்!

சட்டப்பேரவையில் – எஸ்.ஆர்.இராஜா கோரிக்கை!

சென்னை, மார்ச். 29-

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று பேரவையில் தாம்பரம் தொகுதி உறுப்பினர் எஸ்.ஆர். இராஜா கோரிக்கை விடுத்தார்.

இது பற்றிய விவாதம் வருமாறு:

எஸ்.ஆர். இராஜா: தாம்பரம் தொகுதி, கிஷ்கிந்தா சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் எ.வ. வேலு : உறுப்பினர் குறிப்பிடுகிற சாலை தாம்பரம், சோமமங்கலம், நந்தம்பாக்கம் சாலை ஆகும். இந்த சாலைகளினுடைய மொத்த நீளம் 9.60 கி.மீ. இது ஒரு மாவட்ட முக்கிய சாலை. அதாவது MDR (Major District Roads) சாலை. முதலில் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்கு வழிச் சாலையாக ஏற்கனவே உள்ளது. மீதமுள்ள 8.60 கிலோமீட்டர் நீளத்திற்கு இருவழித் தடமாக உள்ளது. இதிலே 1.40 கிலோமீட்டர் சாலையில் நான்குவழிச் சாலையாக உரிய போக்குவரத்து செறிவு உள்ளது. ஆனால், சாலையின் வலது பக்கம் வனத்துறை பகுதியாகவும், இடப்பக்கம் குடியிருப்பு பகுதியாகவும் இருக்கிறது. ஆனால், நான்குவழிச் சாலையாக மாற்ற வனத்துறையின் அனுமதியைப் பெறவும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், அதன் அடிப்படையிலே அந்த பணிகள் பரிசீலனை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. மீதமுள்ள 7.20 கிலோமீட்டர் சாலை போக்குவரத்து செறிவு அடர்த்தியின் அடிப்படையில் நான்குவழிச் சாலையாக அகலப்படுத்துவதற்கு, அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அளிக்கப்படும்.

எஸ்.ஆர். இராஜா: நேற்றையதினம் நகராட்சி மானியக் கோரிக்கையில் தாம்பரம் தொகுதிக்கு செம்பாக்கம், சிட்லபாக்கம், மாடம்பாக்கம் பகுதிக்கு 750 கோடி ரூபாயும், தாம்பரம் மாநகராட்சிக்கு 30 கோடி ரூபாய் நீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கும் எங்களுக்கு உத்தரவிட்ட முதலமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறையின் அமைச்சர் கே.என். நேரு அவர்களுக்கும், இந்த நேரத்திலே என்னுடைய தாம்பரம் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாம்பரம் கிஷ்கிந்தா சாலையைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கத்தைக் கொடுத்தார்கள். நான் சொல்ல வருவது, 2 தொகுதியைச் சார்ந்து வருகிறது. தாம்பரம் தொகுதி மற்றும் ரீபெரும்புதூர் தொகுதியைச் சார்ந்து வருகிறது. குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும், சேவா சதன் பள்ளியிலிருந்து 400 அடி சாலை செல்லுகின்ற road அனைத்தும் அகலமாக இருக்கிறது. அங்கு Highways Department சார்பிலும் வேலை நடைபெறுகிறது. WRD சார்பிலும் அங்கு வேலை நடைபெறுகிறது. அந்த வேலை முடியும் தருவாயில் இருக்கிறது. அதை இரண்டு துறைகளும் முடித்துவிட்டு, அந்தச் சாலையை அகலப்படுத்தினால் தாம்பரம் மக்களுக்கு போக்குவரத்திற்கு நன்றாக இருக்கும்.

அமைச்சர் எ.வ. வேலு: நான் குறிப்பிட்டதுபோல பக்கத்திலே வனப் பகுதி இருக்கின்ற காரணத்தால், அவர்களிடம் permission வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து கொண்டிருக்கிறோம். பொதுவாக தமிழ்நாட்டிலே பார்த்தோமென்று சொன்னால், எங்கெல்லாம் போக்குவரத்துச் செறிவு இருக்கிறதோ அதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு நான்கு வழிச்சாலைகளாக மாற்றி கொண்டிருக்கிறோம். அதுவும் குறிப்பாக தாம்பரம் என்பது ஒரு மாநகராட்சி. அதற்கு இந்த அரசின் சார்பாக முன்னுரிமை அளிக்கப்படும்.

எஸ்.ஆர். இராஜா: கடந்த வாரத்தின் கேள்வி பதிலில், மப்பேட்டிலிருந்து வெங்கம்பாக்கம்வரையுள்ள சாலையினை இரண்டு வழிச்சாலையாக, நான்கு வழிச்சாலையாக மாற்ற வேண்டுமென்று இரண்டு கோரிக்கை வைத்திருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் முக்கியத்துவம் கருதி இந்த budget-லே அதற்கு ஒதுக்கித் தருவதாகச் சொன்னார்கள். அதற்காக இந்த நேரத்தில், இந்த budget-லே ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் 2016 ஆம் ஆண்டின், 110 விதியின்கீழ் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் முடிச்சூர் சாலையினை அகலப் படுத்துவேன் என்று சொன்னார்கள். அதையும் அகலப்படுத்தித் தர வேண்டும். சிட்லப்பாக்கத்திலிருந்து நம்முடைய பகுதியிலே roundtana வேலை நடைபெறுகிறது. அதைத் துரிதமாக முடிக்க வேண்டும். முக்கிய பிரதான சாலையாக இருக்கின்ற வேளச்சேரி சாலையின் இரண்டு பக்கங்களையும் அகலப்படுத்தும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. அந்தப் பணியை துரிதமாக முடித்துத் தர வேண்டும். அதேபோல் ராஜகீழ்பாக்கத்திலிருந்து மாடம்பாக்கம் வரை இரண்டு பக்கங்களிலும் சாலைகள் அகலப்படுத்தி, பணிகள் நடைபெற்று கொண்டிருக்கிறது. அந்தச் சாலையையும் உடனடியாக முடித்துத் தர வேண்டும். நெடுஞ்சாலைத் துறையினைப் பொறுத்தவரையில், தாம்பரம் பகுதியிலே, Eastern Bypass சாலை என்று ஒரு சாலை போடப்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே, அத்துணைப் பகுதிகளிலும், குறிப்பாக- சபாநாயகர் அவர்களே, ஒரே ஒரு second. முக்கிய எல்லா சாலை- இதில் நான் வேலையே கேட்கவில்லை. எல்லா இடத்திலும் வேலை நடைபெற்று கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளையெல்லாம் துரிதமாக முடித்தால் இன்னும் அரசுக்கு ஒரு நல்ல பெயர் வரும், போக்குவரத்திற்கு ஒரு நல்ல பெயர் வரும் என்பதை தங்களுடைய மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் வேளச்சேரி பகுதியினை இணைக்கும் சாலை, அதேபோன்று மாடம்பாக்கம் சாலையினை அகலப்படுத்தும் பணி, அகரம்தென் வெம்பாக்கம் சாலை ஆகிய சாலைகள் குறித்துதான் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டார்கள். அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்று கொண்டிருக்கின்றன என்பது அவருக்கே தெரியும். பணிகளை விரைந்து நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறோம். Easter Bypass என்பது ஏற்கெனவே வேலைகள் நடைபெற்று, இடையிலே பணிகள் நின்று விட்டன. மறுபடியும் நாங்கள் re-tender அறிவித்து, உறுதிப்படுத்தியிருக்கிறோம். அதையும் இந்த ஆண்டிலே அந்தப் பணிகளை நிறைவு செய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில்

படப்பையில் முதல்வர் பிறந்த நாள்- மாபெரும் குருதிக்கொடை முகாம்!

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, மார்ச் 29-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய த.மு.க.மற்றும் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க.இளைஞரணி சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழா மாபெரும் குருதிக்கொடை முகாம் நாளை (30.3.2025- ஞாயிற்றுக் கிழமை) காலை 9 மணியளவில் சி.எல்.சி.மஹால், படப்பை யில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு படப்பை ஆ.மனோகரன் தலைமை வகிக்கிறார்.

அமிர், பா.அறிவொளி, ரா.தீபக், மா.சு.பிரகாஷ், பொன் இளைய பாரதி, லோ.சுதாகர், இரா.குமரவேல், சே.பார்த்திபன், ஆர். சையத் ரமேஷ், இ.பாலாஜி ஆகியோர் வரவேற்கின்றனர்.

குருதிக்கொடை முகாமினை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சிறுகுறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர்- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மீஞ்சூர் பாஸ்கர் சுந்தரம், கோல்டு பிரகாஷ், எல்.பிரபு, சரஸ்வதி மனோகரன், ஏ வந்தே மாதரம், உமா மகேஸ்வரி வந்தே மாதரம், பா.ராம மூர்த்தி, நந்தகோபால், மணி, வாசுகி, மகேஷ், சி. பார்த்தசாரதி, பி.ஹரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன், சங்கீதா வேலு, பொன் ரமேஷ் கவி, மலர் விழி தமிழமுதன், எஸ்.கர்ணன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், கா. பாலகிருஷ்ணன், எஸ்,வைரம், தீ.ஏ.ராயப்பா, தினேஷ், கந்தசாமி, ரேவதி, கோதண்டராமன், சத்தியமூர்த்தி, எம். எஸ்.இளங்கோ மற்றும் பலர் பங்கேற்கின்றனர்.

ஆடல் அரசு நன்றி கூறுகிறார்.

வை.ம. அருள்தாசன் ஏற்பாடு! திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

முதல்வர் பிறந்தநாள் : மாபெரும் இலவச மருத்துவ முகாம்!

மாதவரம் எஸ். சுதர்சனம் பங்கேற்பு! டி.சேகர் முன்னிலை!

சென்னை, மார்ச் 29-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் கழக தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு இன்று (29.3.2025) சனிக்கிழமை எண்ணூர் கத்திவாக்கம் நடுநிலைப்பள்ளியில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இவ்விழாவில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்கிறார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் ந. திருசங்கு, இ.குமரவேல், யு.எஸ். குறளரசன் ஏ.இந்துமதி, எம். வஜ்ரவேல், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வட்ட கழக நிர்வாகிகள் டி.சேகர், க. பாலு, ரா. மதன்குமார், டி. கண்ணன், எஸ். தேவி, கே.சீனிவாசன், ஆர்.பிரசாத், என். சத்தியமூர்த்தி, க. ஜெயபிரகாஷ், பி. ரமேஷ், சி. சேகர், ஆகியோர் வரவேற்பில் நடைபெறுகின்றது.

இந்த முகாமில் தோல் நோய், மக்பேறு மருத்துவம், சர்க்கரை நோய் நிபுணர்கள், பொது மருத்துவம், மற்றும் இரத்தப் பரிசோதனை, பொது உடல் பரிசோதனை செய்யப்பட்டு உடனடியாக அதே இடத்தில் அவர்களுக்கு தரமான மருந்துகளும் வழங்கவும் சிறப்பு மருத்துவர்கள் பங்கேற்க உள்ளதாலும் பொதுமக்கள் வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அது சமயம் முன்னாள் / இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் / சட்டமன்ற உறுப்பினர்கள்/ தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், வட்ட செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள், தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரத்தில் புனித ரமலான் பெருநாளை முன்னிட்டு

இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ வழங்குகிறார்! பகுதிச் செயலாளர் டி.காமராஜ் அறிக்கை!

தாம்பரம், மார்ச். 29-

பெருங்களத்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் டி. காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தாம்பரம் மாநகர பெருங்களத்தூர் வடக்கு பகுதி திமுக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு நடத்தும் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவையொட்டி புனித ரமலான் பெருநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (29/3/2025 சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் 3 வது தெரு ரங்கநாதபுரம் மேற்கு தாம்பரத்தில் எனது டி.காமராஜ் பகுதி கழக செயலாளர் 4 வது மண்டல குழு தலைவர் தலைமையிலும் மாநகர சிறுபான்மை நலப் பிரிவு அணியின் அமைப்பாளர் ர.அகஸ்டின் வரவேற்புரையிலும்.டி.ஆர்.கோபி, ஜா. ரவிக்குமார், ஆர்.ஜீவன், இரா.செல்வகுமார், லிங்கேஸ்வரிபாபு, ர.செல்வகுமார், செ.சுரேஷ், எம்.கன்னியப்பன், எம்.ரவிக்குமார், இரா.கந்தசாமி, எஸ்.சரவணன், பி.காளியப்பன், ஆர். சீனா, நா.ஷாஜகான், எஸ். கார்த்திக், ந.இன்பராஜ், ஜூலியட் அதிசயராஜ், அருள்பிரான்சிஸ், து.அந்தோணி, அ.ரொனால்ட் ரொசாரியோ, எஸ்.செல்வ பிரகாஷ், எஸ்.மகேஷ் ஆகியோர்கள் முன்னிலையில்.

புனித ரமலான் வாழ்த்துக்களுடன் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ இந்நிகழ்ச்சியில் மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ் பகுதி கழக செயலாளர்கள் எஸ். இந்திரன், எஸ்.சேகர், இரா. சுரேஷ். வே.இராசேந்திரன், கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், , ரமணி ஆதிமூலம், இரா.இரத்தினகுமார், இ.மனோகரன், இரா.விஜயகுமார், டி.கே.தாமஸ், எம். எஸ்.லலித்ராஜதீபன், வி. கார்த்திக், ச.இராஜேஷ், வே.சிவசுப்பிரமணியம், ஜி.ஸ்ரீதர்குமார், இ.கமலகண்ணன், எம்.வினோத், பி.ஜோதி குமார், எல்.பெரியநாயகம், மு.விஜயன், , வி.முனுசாமி, எம்.சினிவாசகுமார், கே.ரமேஷ்பாபு, டிவி.முருகன், சி.செழியன், ஆர். சஞ்சீவி.கு.பிரபாகரன், ஆர்.தாமோதரன், சசிகலா கார்த்திக், செ.முகுந்தன், டி.கே.தாமஸ், மின்கடை செல்வம், மைகேல்ராஜ், மங்களபுரம் பாபு மற்றும் மாநகர பகுதி கழக நிர்வாகிகள் வட்டச் செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களும் மற்றும் எம்.குத்தூஸ் கனி நன்றி உரை நிகழ்த்த உள்ளார்கள்.

ஆகவே இன்நிகழ்ச்சியில் கலந்து தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு தனது அறிக்கையில் டி.காமராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.